பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல 438

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்

பத்தாவது பாராளுமன்றம்

(முதலாவது கூட்டத்தொடர்)

# அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின்

# பதினைந்தாவது அறிக்கை

(2025.10.08 ஆம் திகதி நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை
தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை)

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தவிசாளர்
பாராளுமன்ற உறுப்பினர்
கௌரவ. (டாக்டர்) நிஷாந்த சமரவீர அவர்களால்
2026 சனவரி மாதம் 08 ஆம் திகதி ஆற்றுப்படுத்தப்பட்டது.

2026 சனவரி மாதம் 08 ஆம் திகதி அச்சிடப்பட வேண்டும் என்று
பாராளுமன்றத்தினால் ஆணையிடப்பட்டது.

## <u>பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் கட்டமைப்பு</u>

1. கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர, பா.உ, (தவிசாளர்)
2. கௌரவ அர்கம் இல்யாஸ், பா.உ, (2025.05.08 முதல்)
3. கௌரவ மனோ கணேசன், பா.உ, (2025.03.21 முதல்)
4. கௌரவ (சட்டத்தரணி) தயாசிறி ஜயசேகர. பா.உ, (2025.05.20 முதல்)
5. கௌரவ (சட்டத்தரணி) அர்ஜுன சுஜீவ சேனசிங்க. பா.உ, (2025.03.21 முதல்)
6. கௌரவ. டி.வி. சானக, பா.உ, (2025.03.21 முதல்)
7. கௌரவ (சட்டத்தரளி) அநுராத ஜயரத்ன, பா.உ (2025.03.21 முதல்)
8. கௌரவ நலீன் பண்டார ஜயமஹ, பா.உ, (2025.03.21 முதல்)
9. கௌரவ. எஸ்.எம். மரிக்கார், பா.உ, (2025.03.21 முதல்)
10. கௌரவ முஜிபுர் ரஹுமான், பா.உ, (2025.05.20 முதல்
11. கௌரவ சமிந்த விஜேசிறி, பா.உ, (2025.03.21 முதல்)
12. கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா, பா.உ, (2025.05.08 முதல்)
13. கௌரவ எம்.கே.எம் அஸ்லம், பா.உ,
14. கௌரவ (சட்டத்தரணி) நிலந்தி கொட்டஹச்சி, பா.உ, (2025.03.21 முதல்)
15. கௌரவ சமன்மலீ குணசிங்க, பா.உ.
16. கௌரவ திலித் ஜயவீர, பா.உ,, (2025.03.21 முதல்)
17. கௌரவ மயில்வாகனம் ஜெகதீஸ்வரன், பா.உ, (2025.05.08 முதல்)
18. கௌரவ சுஜீவ திஸாநாயக்க, பா.உ,
19. கௌரவ சுதத் பலகல்ல பா.உ
20. கௌரவ (டாக்டர்) எஸ். ஸ்ரீ பவாகந்தராஜா, பா.உ
21. கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வு பெற்ற) பிரகீத் மதுரங்க பா.உ, (2025.03.21 முதல்)
22. கௌரவ ஜகத் மனுவர்ண, பா.உ.

23. கௌரவ ருவன் மாபலகம, பா.உ.
24. கௌரவ சுனில் றாஜபக்ஷ, பா.உ.
25. கௌரவ தர்மப்ரிய விஜேசிங்க, பா.உ
26. கௌரவ அசித நிரோஷண எகொட விதான, பா.உ
27. கௌரவ (டாக்டர்) பத்தநாதன் சத்தியலிங்கம், பா.உ, (2025.03.21 முதல்)
28. கௌரவ திலிண சமரகோன், பா.உ.
29. கௌரவ சந்திம ஹெட்டியாரச்சி, பா.உ.
30. கௌரவ (செல்வி) (சட்டத்தரணி) ,லக்மாலி ஹேமச்சந்திரபா.உ,
31. கௌரவ தினேஷ் ஹேமந்த, பா.உ, (2025.03.21 முதல்)

## அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் பணியாட்டொகுதியினர்

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தற்போதைய பணியாட்டொகுதியினர் பின்வருமாறு

| | |
|---|---|
| ❖ பிரதம அதிகாரி | திருமதி. ரூபானி டி சொய்சா |
| ❖ பிரதிப் பிரதம அதிகாரி | திரு. எஸ். எல். விக்ரம |
| ❖ பாராளுமன்ற அலுவலர். | திருமதி. ஜி.வி.எஸ்.கே. குமாரி |
| ❖ பாராளுமன்ற அலுவலர். | திருமதி. ஐ.எஸ். கோமஸ். |
| ❖ பாராளுமன்ற அலுவலர். | திருமதி. ஜீ.எல்.டி. பிரனாந்து |
| ❖ பாராளுமன்ற அலுவலர். | செல்வி. எம்.என்.பி. பெரேரா |

## குழு அறிக்கைகள்

www.parliament.lk என்ற இணையத் தளத்தில் பின்வரும் வழியில் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் அறிக்கையைத் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்

www.parliament.lk

↓

தமிழ்

↓

பாராளுமன்ற நடவடிக்கைகள்

↓

குழுக்கள்

↓

குழு அறிக்கைகள்

## பொருளடக்கம்.

**பக்க எண்**


1. தவிசாளரின் குறிப்புக்கள் VII
2. நிறைவேற்றுச் சாராம்சம் V
3. நிதியறிக்கைகள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம் IX
4. அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் விசாரணை செய்யப்பட்ட நிறுவனம்

   – நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை


.

## தவிசாளரின் குறிப்பு

இலங்கைப் பாராளுமன்றத்தின் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் போது, 2025.10.08 ஆம் திகதி பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்ட வீடமைப்பு, நிர்மாண நீர் வழங்கல் அமைச்சின் கீழ் உள்ள நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்குரிய கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை குறித்த விரிவான அறிக்கையை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 148 ஆம் அரசியலமைப்பு உறுப்புரைக்கு அமைய, பாராளுமன்றத்திற்குரிய நிதிக் கட்டுப்பாட்டுடன் நேரடியாகத் தொடர்புடைய அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் புலனாய்வுச் செயற்பாடுகளின் மூலம் நாட்டின் அரச நிறுவனங்களின் நிதி மற்றும் ஏனைய சொத்துக்களை முகாமை செய்வது ஒரு முக்கிய பணியாக அடையாளம் காணப்பட்டுள்ளது .

ஒட்டுமொத்த நிர்மாணக் கைத்தொழிலையும் முறையாக ஒழுங்குறுத்துதல், முகாமை செய்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல், தரம், நிர்மாணங்களின் தரம் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்குத் தேவையான தரநிலைகள் மற்றும் குறியீடுகளைத் தயாரித்தல், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் தொழில்முறை வல்லுநர்களைப் பதிவு செய்தல் மற்றும் தரப்படுத்துதல் போன்றே இக்கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் திறன்களை மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக, 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் மூலம் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) நிறுவப்பட்டுள்ளது. கட்டுமானத் துறை தொடர்பாகச் செயற்படும் ஒரேயொரு ஒழுங்குறுத்தும் நிறுவனம் இந்த அதிகாரசபையாகும்.

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் பரிந்துரைகள் குறித்துப் பொறுப்புக்கூற வேண்டிய அனைத்துத் தரப்பினரினதும் அவதானத்தைச் செலுத்துவதன் ஊடாகவே இக்குழுவின் விசாரணைகள் மூலம் கிடைக்க வேண்டிய அதிகபட்ச சேவையானது நாட்டுக்குக் கிடைக்கின்றது .அங்கு நாட்டின் இறையாண்மை கொண்ட பொதுமக்களின் பிரதிநிதிகள் என்ற ரீதியில், இந்த கௌரவ சபையினால் வழங்கப்படும் பரிந்துரைகளைச்

நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் இம்முயற்சியானது மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதைக் கூற விரும்புகின்றேன்.

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு, இக்குழுவின் கௌரவ அங்கத்தவ உறுப்பினர்கள் உள்ளிட்ட பாராளுமன்றப் பணியாளர்கள் மற்றும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் இரு ஆலோசகர்களின் ஒத்துழைப்பையும், திறைசேரி அதிகாரிகள் மற்றும் தேசிய கணக்காய்வு அலுவலகத்திடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்பையும் நன்றியுடன் பாராட்டுகின்றேன்.

**டாக்டர் நிஷாந்த சமரவீர**
தவிசாளர்
அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு

## <u>நிறைவேற்றுச் சுருக்கம்</u>

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் 2025.10.08 ஆம் திகதி, நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை தொடர்பான 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்குரிய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் மற்றும் அதிகாரசபையின் தற்போதைய செயலாற்றுகை குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ள சட்ட ரீதியான பொறுப்புகள் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றுவதில் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு விரிவாகப் ஆராய்ந்த போது, 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் அதிகாரசபையை நிறுவியதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடையத் தவறியுள்ளமை அவதானிக்கப்பட்டது. நிறுவனம் நிறுவப்பட்டு 11 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும், சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 33 பிரதான பணிகளில் 15 பணிகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும், அதிகாரசபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பிரதான நோக்கங்களான நிலைபேறான கட்டிட அபிவிருத்தி மற்றும் துறைசார் ஆராய்ச்சிகள் போன்ற துறைகளின் முன்னேற்றம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதாகவும் குழு மேலும் அவதானித்தது.

அதிகாரசபைக்கு அங்கீகரிக்கப்பட்ட 390 பதவிகளில் 201 (51.5%) பதவிகள் வெற்றிடமாக உள்ளமை, நிறுவன மற்றும் செயல்பாட்டு மட்டத்தில் அடையாளம் காணப்பட்ட மிக மோசமான பிரச்சினையாகக் கண்டறிந்த குழு, 03 ஆண்டுகளுக்கும் மேலாக பணிப்பாளர் மட்டத்திலான சில பதவிகளும், உள்ளகக் கணக்காய்வாளர் பதவியும் வெற்றிடமாக உள்ளமை நிறுவனத்தின் செயலாற்றுகை குறைவடைவதற்கும் நிர்வாகப் பிரச்சினைகள் ஏற்படுவதற்கும் காரணமாக அமைந்துள்ளதாகக் குழு அவதானித்தது.

அதேபோன்று, இந்த அதிகாரசபை உத்தியோகத்தர்களுக்கிடையிலான தனிப்பட்ட முரண்பாடுகள் மற்றும் ஒற்றுமையின்மை என்பன அதிகாரசபையின் ஒட்டுமொத்த நடவடிக்கைகளிலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்றும், அதன் மூலம் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதில் உள்ள முன்னேற்றம் மேலும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் குழு அவதானித்தது. இந்நிலையைச்

தணிப்பதற்காக, அதிகாரசபையினால் ஒழுங்குறுத்தல் மற்றும் ஆராய்ச்சிப் பணிகளை வலுப்படுத்தும் புதிய பணியாட்டொகுதிக் கட்டமைப்பு முன்மொழியப்பட்டிருந்ததோடு, முகாமைத்துவ சேவைத் திணைக்களம் இரண்டு வாரங்களுக்குள் அத்திருத்தங்களுக்கு அங்கீகாரம் வழங்கத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதிகாரசபையின் ஒழுங்குறுத்தல் மற்றும் அபிவிருத்தி செயலாற்றுகை தரவுகளை பகுப்பாய்வு செய்தபோது, முன்னேற்றத்தில் பெரும் சமநிலையின்மை காணப்பட்டது. ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளைத் தாண்டியிருந்த போதிலும், ஆதன அபிவிருத்தியாளர்களைப் பதிவு செய்தல் (35%) மற்றும் தகுதியுள்ள நபர்களைப் பதிவு செய்தல் (0%) போன்ற ஒழுங்குறுத்தல் பிரிவுகளின் முன்னேற்றம் மிகவும் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது. இதற்கான பிரதான காரணம், தனியார் துறை தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் ஒழுங்குறுத்தல் சட்டங்களை மீறுபவர்களுக்கு எதிராகச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கும் போதிய ஏற்பாடுகள் சட்டத்தில் இல்லாமையாகும். மேலும், அதிகாரசபையின் பிரதான ஒழுங்குறுத்தல் கருவிகள் இரண்டான தேசிய நிர்மாணத் தரவுத் தொகுப்பினைப் பேணிச் செல்லும்போது அரசாங்க நிறுவனங்களின் தரவுகள் மாத்திரம் உள்வாங்கப்படுகின்றமை மற்றும் தேசிய கட்டிடக் கோவை தயாரிக்கும் பணி நீண்டகாலமாகத் தாமதமடைந்து வருகின்றமை தொடர்பில் குழுவின் அவதானம் திரும்பியது.

இவ்விடயங்கள் அனைத்தும் குறித்து விரிவாகக் கலந்துரையாடிய குழு, தாமதமடைந்துள்ள அனைத்து நோக்கங்களையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்காகக் குறிப்பிட்ட கால எல்லைகளை உள்ளடக்கி புதிய கூட்டுத் திட்டமொன்றைத் தயாரித்தல், அங்கீகரிக்கப்பட்ட புதிய பணியாட்டொகுதியின் கட்டமைப்பின் கீழ் துரிதமாக வெற்றிடங்களை நிரப்புதல் மற்றும் நாட்டின் நிர்மாணத் துறையை ஒழுங்குறுத்தும் ஒரேயொரு நிறுவனம் என்ற ரீதியில் தேசிய கட்டிடக் கோவையை நடைமுறைப்படுத்தும் பணிகளுக்கு அதிகாரசபை தலைமைத்துவத்தை வழங்குதல் ஆகிய நடவடிக்கைகளை எடுக்குமாறு பரிந்துரைத்தது.

# பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரின்அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் பன்னிரண்டாவது அறிக்கை

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் (முதலாவது 12 மாதங்களுக்குள்) பின்வருமாறு குழுக்கூட்டங்களை நடத்தியுள்ளது.

| தொடர் இலக்கம் | அழைக்கப்பட்ட நிறுவனம் | குழு கூடிய திகதி |
|---|---|---|
| I. | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | 2025.02.18 |
| II. | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | 2025.02.20 |
| III. | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் . | 2025.02.27 |
| IV. | தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபை | 2025.03.05 |
| V. | தேசிய மருந்தாக்கல் ஒழுங்குறுத்துகை அதிகார சபை | 2025.03.12 |
| VI. | தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபை | 2025.03.27 |
| VII. | வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (தனி) கம்பனி | 2025.04.02 |
| VIII. | காணி சீர்திருத்த ஆணைக்குழு | 2025.05.08 |
| IX. | வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (தனி) கம்பனி | 2025.05.09 |
| X. | சிறீ ஜயவர்தனபுர வைத்தியசாலை | 2025.05.15 |
| XI. | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம். | 2025.05.23 |
| XII. | இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் | 2025.06.04 |
| XIII. | சிறீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 2025.06.20 |

| | | |
|---|---|---|
| XIV. | மஹாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 2025.07.09 |
| XV. | காணி சீர்திருத்த ஆணைக்குழு | 2025.07.17 |
| XVI. | அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் | 2025.07.23 |
| XVII. | சிவில் விமான சேவைகள் அதிகார சபை | 2025.08.20 |
| XVIII. | இலங்கை துறைமுக அதிகாரசபை | 2025.09.10 |
| XIX. | புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கமகழ்வுப் பணியகம் | 2025.09.12 |
| XX. | இலங்கை மின்சார சபை | 2025.09.24 |
| XXI. | நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை | 2025.10.08 |
| XXII. | வரையறுக்கப்பட்ட லங்கா சதொச | 2025.10.10 |
| XXIII. | வரையறுக்கப்பட்ட எல்ரி.எல். ஹோல்டிங் . கம்பனி மற்றும் அதனால் நிர்வகிக்கப்படும் கம்பனிகள் | 2025.10.24 |
| XXIV. | தேசிய சேமிப்பு வங்கி | 2025.11.19 |
| XXV. | தேசிய சேமிப்பு வங்கி | 2025.11.26 |

அவற்றில், 2025.10.08 ஆம் திகதி நகர அபிவிருத்தி, நிர்மாணம், வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்குரிய கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகள் மற்றும் அந்த நிறுவனத்தின் தற்போதைய செயலாற்றுகையைப் பரிசோதித்து வெளியிடப்பட்ட குழுவின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## நிதி அறிக்கைகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம்

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்குத் தொடர்புடையதாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதி அறிக்கைகள் சம்பந்தமாக கணக்காய்வாளர் நாயகத்தின் அபிப்பிராயம் கீழே தரப்பட்டுள்ளது.

| நிறுவனம் | வருடம் | | |
|---|---|---|---|
| | 2022 | 2023 | 2024 |
| நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

### கணக்காய்வு அபிப்பிராய வகைகள்

1. **முனைப்பழியற்ற அபிப்பிராயம் (Unqualified Opinion)**

   நிதியறிக்கையில் நிறுவனத்தின் நிதி நிலைமையை நியாயமான முன்வைக்கப்பட்டுள்ளதாக

2. **முனைப்பழியுள்ள அபிப்பிராயம் (Qualified Opinion)**

   அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தக்கம் தவிர நிறுவனத்தின் நிதி நிலைமை, நிதிச் செயற்பாடு மற்றும் காசுப் பாய்ச்சல் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கேற்ப மெய்யாகவும் நியாயமாகவும் பிரதிபலிப்பதாக

3. **அபிப்பிராயத் துறப்பு (Disclaimer of Opinion)**

   போதுமான அல்லது பொருத்தமான கணக்காய்வு சாட்சிகளை இனம்காண முடியாததால் கணக்குகள் தொடர்பில் அபிப்பிராயம் தெரிவிக்க முடியாததாக

4. **எதிர்மறை அபிப்பிராயம் (Adverse Opinion)**

நிறுவனத்தின் நிதி நிலைமை, நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்குட்பட்டு மெய்யாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்காததாக

## நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை

***(வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர்வழங்கல் அமைச்சு)***

**விசாரணை செய்யப்பட்ட திகதி - 2025.10.08**

**கலந்துரையாடப்பட்ட விடயங்கள்**

1. **அதிகாரசபையின் நோக்கங்கள்**

2014ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, அதிகாரசபையினால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய 7 நோக்கங்களுள் பிரதானமான 3 நோக்கங்கள் குறித்து குழுவானது பின்வரும் விடயங்களை அவதானித்தது.

| அதிகாரசபையின் நோக்கங்கள் | குழுவிடம் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் | குழுவின் அவதானிப்பு |
|---|---|---|
| (ஈ) வலுசக்தி வினைத்திறன் மிக்க கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புகளைத் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி செய்தல் தொடர்பாக விசேட கவனத்தைச் செலுத்தி, நிர்மாணக் கைத்தொழிலின் | ✓ வலுசக்தி வினைத்திறன் கொண்ட கட்டடங்கள் தொடர்பான வழிகாட்டல்கள் மற்றும் தரநியமங்களைத் தயாரித்தல்.<br>✓ தற்போதுள்ள கட்டடங்களை வலுசக்தி சேமிப்பு முறைகள் ஊடாக மீளமைத்தல். | ✓ இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான ஒரே நிறுவனம் இவ்வதிகாரசபை என்பதால், துரிதமாகவும், முறையான திட்டங்களுடன் கூடியதுமான உலகளாவிய |

| | | |
|---|---|---|
| நிலைபேறான வளர்ச்சிய மேம்படுத்தல். | ✓ தேசிய விருதுத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்.<br>✓ தேசிய கட்டடக் கோவையை (NBC) தயாரிப்பதற்கான நீண்ட செயன்முறையை ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து முன்னெடுத்தல். | மாதிரிகளைக் கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும்.<br>✓ தேசிய கட்டடக் கோவையை அமல்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் அதிகாரசபை தலைமைத்துவத்தை வழங்க வேண்டும். அத்துடன் இச்செயன்முறையை துரிதப்படுத்த வேண்டும். |
| (உ) நிர்மாணக் கைத்தொழில் மற்றும் அதன் அபிவிருத்தி தொடர்பான ஏதேனும் விடயங்கள் குறித்து பொருத்தமான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை வெளியிடுதல் மற்றும் விஸ்தரிப்பை மேம்படுத்தல். | ✓ சட்டம் திருத்தப்பட்ட பின்னர் ஆராய்ச்சிப் பிரிவு மேலும் வலுப்படுத்தப்படும். | ✓ ஆராய்ச்சிப் பிரிவை மேம்படுத்துவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரசபைகளுடன் கலந்தாலோசித்து, நிர்மாணக் கைத்தொழிலின் தரநியமங்களைத் தயாரித்தல் மற்றும் | ✓ தேசிய கட்டடக் குறுயீடுகளைத் தயாரிக்கும் போது தரப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக ஏனைய நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படல்.<br>✓ சட்டத்தின் மூலம் அதிகாரம் | ✓ கணக்காய்வு அறிக்கைகளின்படி இந்த நோக்கம் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| அந்தத் தரநியமங்களை கட்டாயத் தரநியமங்கள் மற்றும் விருப்பத் தரநியமங்கள் என வகைப்படுத்துதல். | வழங்கப்பட்டிருந்த போதிலும், ஏனைய நிறுவனங்கள் இவ்விடயத்தை உரிய முக்கியத்துவத்துடன் பொறுப்பேற்காத காரணத்தினால் இதனை நடைமுறைப்படுத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது என | |

## 2. அதிகாரசபையின் பிரதான பணிகள்

இந்த அதிகாரசபை நிறுவப்பட்டு 11 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும், சட்டத்தின் மூலம் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ள 33 கடமைகளில் 15 கடமைகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளமை குழுவிடம் வெளிப்படுத்தப்பட்டது. (இணைப்பு 01 - சட்டத்தின் மூலம் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ள பணிகள்)

## 3. செயலாற்றுகை - சட்டத்தின் நோக்கங்கள் மற்றும் வாசகம்களுடனான இணக்கப்பாடு

அது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் குழுவிடம் வெளிப்படுத்தப்பட்டன.

| சட்டத்தின் வாசகம் | தற்போதைய முன்னேற்றம் |
|---|---|
| **29 ஆம் வாசகம்**<br>10 மில்லியன் ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதியுடைய அடையாளங்காணப்பட்ட நிர்மாண வேலைகள் பற்றிய அறிக்கைகளைப் பேணுதல். | தற்போதுள்ள தரவு முறைமை முழுமையற்றதாகக் காணப்படுவதுடன், அதில் அரசாங்கத்துடன் இணைந்த நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் நிர்மாண வேலைகள் மாத்திரமே உள்ளடக்கப்பட்டுள்ளன. |
| **33 ஆம் வாசகம்**<br>வெளிநாட்டு ஆலோசகர்களைப் பதிவு செய்யும் நடைமுறைகளைத் தீர்மானித்தல். | வெளிநாட்டு ஆலோசகர்கள் பதிவு தொடர்பான ஒழுங்குவிதிகள் (Regulation) தயாரிக்கப்பட்டு, 2023 ஆம் ஆண்டில் நிறைவு |

| | |
|---|---|
| | செய்யப்பட்டு சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| **46 ஆம் வாசகம்**<br>பெறுகை நடவடிக்கைகளுக்காகத் தரப்படுத்தப்பட்ட விலைகேட்பு ஆவணங்களை (Standard Bidding Documents - SBDs) தயாரித்தல் மற்றும் காலத்திற்கேற்ப திருத்தியமைத்தல். | தரப்படுத்தப்பட்ட ஏல ஆவணங்கள் (SBDs) ஏற்கனவே சில தடவைகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. அந்த ஆவணங்கள் குழுவொன்றின் மூலம் பரிசீலிக்கப்பட்டு வருவதுடன், 2025 டிசம்பர் மாதளவில் அவற்றை வெளியிட எதிர்பார்க்கப்படுகிறது. |
| **51 ஆம் வாசகம்**<br>கைத்தொழில் பிணக்குகளைத் தீர்த்தல் (Arbitration) நடைமுறைகளைத் தயாரித்தல். | நடுத்தீர்ப்புச் செயன்முறை (Arbitration)<br>அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், அதனை நிறைவு செய்யும் பணிகள் மாத்திரமே எஞ்சியுள்ளன. |
| **55 ஆம் வாசகம்**<br>தகவல் செயலகமொன்றை நிறுவுதல் மற்றும் அதன் பணிகள், நடைமுறைகள் மற்றும் செயலாற்றுகை தரநியமங்களைத் தீர்மானித்தல். | இந்தத் தகவல் செயலகத்தை நிறுவுவதற்குத் தேவையான மென்பொருள் தொகுப்பு (Software package) இந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

## 4. 2014ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள்

சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான பணிகள் தொடர்பாக பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும், அத்திருத்தப் பணிகள் இறுதி கட்டத்தில் உள்ளன என்பதும் குழுவில் வெளிக்கொணரப்பட்டது.

- ✓ வலுக்குக் கொண்டு வருதல் தொடர்பான ஏற்பாடுகள் போதுமானதாக இல்லாமை:

  சட்டத்தில் வலுவுக்குக் கொண்டு வருவதற்கான அதிகாரங்கள் போதுமானதாக இல்லையயென்பதால், வழக்குத் தொடர்வதற்கு

மேலதிகமாக, உடனடி குற்றப்பணம் (Spot Fine) போன்ற மாற்று வழிமுறைகளைச் சட்டத்தில் உள்ளடக்குதல்.

இந்தத் திருத்தத்தின் மூலம் நிலைபேறான தன்மை (Sustainability) மற்றும் தகவல் தொழில்நுட்ப அறிவு (IT knowledge) ஆகிய துறைகளை இணைக்க எதிர்பார்ப்பதுடன், வலுவுக்குக் கொண்டு வருதல் மற்றும் ஆராய்ச்சிகளைப் பலப்படுத்துவதும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

- ✓ அதிகாரசபையின் நிதி:
- ✓ சட்டத்தின் 19ஆம் வாசகத்தில் அதிகாரசபையின் நிதியம் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அரசாங்கத்தின் கொள்கைகள் காரணமாக அபிவிருத்தி வரிகள் (Development levies) நடைமுறைப்படுத்தப்படாததால் அந்த நிதியம் தற்போது செயலிழந்துள்ளதென்றும் இதன் காரணமாக, சிறு மற்றும் நடுத்தர அளவிலான ஒப்பந்தக்காரர்களை அபிவிருத்தி செய்தல் உள்ளிட்ட சட்டத்தின் முக்கிய அம்சங்களை நடைமுறைப்படுத்த முடியாமல் போயுள்ளது.

5. **<u>கூட்டுத் திட்டம் (Corporate Plan) மற்றும் செயற்பாட்டுத் திட்டத்தைப் இற்றைப்படுத்தல்</u>**

அதிகாரசபையினால் தற்போதைய 2025 - 2029 கூட்டுத் திட்டத்தை துரிதமாக மீளாய்வு செய்து, 2026 - 2030 காலப்பகுதிக்காக 'சுழற்சித் திட்டம்' (Rolling Plan) முறைமையின் கீழ் புதிய கூட்டுத் திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென குழு சுட்டிக்காட்டியது.

**<u>குழுவின் பரிந்துரைகள்</u>**

I. **அதிகாரசபையை ஸ்தாபித்தல் தொடர்பான சட்டத்தில் தேவையான திருத்தங்களை மேற்கொள்ளல், ஆட்சேர்ப்பு நடைமுறைகளை**

**மீளாய்வு செய்தல் (SoR Revision) மற்றும் தரவு முறைமையைப் பூர்த்தி செய்தல் உள்ளிட்ட தாமதமடைந்துள்ள அனைத்து நோக்கங்களையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்கு, குறிப்பிட்ட கால எல்லைகள் மற்றும் நடவடிக்கைகளை உள்ளடக்கிய ஒரு செயற்பாட்டுத் திட்டத்தையும், 'சுழற்சித் திட்டம்' (Rolling Plan) முறைமையிலான புதிய கூட்டுத் திட்டத்தையும் தயாரித்தல்.**

6. **<u>வருடாந்த அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்</u>**

அதிகாரசபையினால் 2023ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை குழு அவதானித்தது.

**<u>குழுவின் பரிந்துரைகள்</u>**

I. **2023, 2024ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகளை விரைவாகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.**

7. **<u>உள்ளகக் கணக்காய்வு</u>**

அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வாளர் (உதவிப் பணிப்பாளர்) பதவி மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக வெற்றிடமாகக் காணப்படுவதுடன், கணக்காய்வுப் பிரிவு ஒரு அதிகாரியை மாத்திரமே கொண்டுள்ளது. முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக அந்தப் பதவியில் பதில் கடமையாற்றுவதும், ஆட்சேர்ப்பு தாமதமடைவதும் உள்ளக் கட்டுப்பாட்டிற்குப் பாரதூரமானதொரு விடயமென்றும், பிரதேச மட்டத்தில் 03 பயிற்சி நிலையங்களுடன் 189 அதிகாரிகள் அதிகாரசபையில் சேவையாற்றிய போதிலும், நிறுவனத்தின் செயற்பாடுகள் குறித்து முறையான மீளாய்வை மேற்கொள்ள முடியாமல் இருப்பதையும் குழு சுட்டிக்காட்டியது.

உள்ளக் கணக்காய்வுப் பிரிவின் பணிகளை முறையாக நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்தும் பொறுப்பானது, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 (1) (ஈ) வாசகத்தின்படி, பிரதான கணக்கீட்டு அலுவலரைச் சாரும் என கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டினார்.

### குழுவின் பரிந்துரைகள்

I.

- **அதிகாரசபைக்காக முன்மொழியப்பட்டுள்ள புதிய பணியாளர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டவுடன், உள்ளகக் கணக்காய்வாளர் பதவியிலுள்ள வெற்றிடத்தைப் பூர்த்தி (உதவி பணிப்பாளர்) செய்தல்.**
- **அதுவரை அந்தப் பதவியின் பொறுப்புக்களை ஏற்கக்கூடிய தகுதியுள்ள அதிகாரி ஒருவரை நியமித்தல்.**
- **உள்ளகக் கணக்காய்வுப் பிரிவைப் பலப்படுத்துதல்.**
- **நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் முறையாகக் கணக்காய்விற்கு உட்படுத்தி அறிக்கைகளைப் பேணுதல் மற்றும் அதன் மூலம் எழும் சிக்கலான நிலைமைகளுக்காக உள்ளக விசாரணைகளை முன்னெடுத்தல்.**

## 8. <u>பணியாட்டொகுதியின் கட்டமைப்பு</u>

2025.06.30ஆம் திகதியன்று அதிகாரசபையின் பணியாளர் கட்டமைப்பு பின்வருமாறு காணப்பட்டதை குழு அவதானித்தது.

| பணியாளர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கை | மெய்யான பணியாளர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | அவதானிப்பு |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட முகாமைத்துவ மட்டம் | 36 | 20 | 16 | ✓ பணிப்பாளர் (நிதி) மற்றும் பணிப்பாளர் (அபிவிருத்தி) பதவிகள் ஒரு வருடத்திற்கும் மேலாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | வெற்றிடமாக உள்ளன.<br>✓ அப்பணிகள் பதில் கடமையாற்றும் அடிப்படையில் உதவிப் பணிப்பாளர் (நிதி) மற்றும் பிரதிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) ஆகியோரால் நறைவேற்றப்படுகின்றன.<br>✓ பிரதி/உதவிப் பணிப்பாளர் பதவிகளில் 14 வெற்றிடங்கள் காணப்படுகின்றன |
| **நடுத்தர முகாமைத்துவ மட்டம்** | 71 | 32 | 39 | ✓ பிரதான பணிகளுடன் நேரடியாகத் தொடர்புடைய பொறியியல் பட்டம் பெற்ற 12 அலுவலர் பதவிகள் வெற்றிடமாக உள்ளன. |
| **கனிஷ்ட முகாமைத்துவ மட்டம்** | 153 | 70 | 83 | ✓ புதிய ஆட்சேர்ப்புகள் தாமதமடைவதால் வெற்றிடங்கள் அதிகரித்துள்ளன. |
| **ஆரம்ப மட்டம்** | 130 | 67 | 63 | ✓ பெருமளவிலான ஊழியர்கள் ஓய்வு பெற்றமையால் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன |
| **மொத்த பணியாளர் எண்ணிக்கை** | **390** | **189** | **201** | ✓ அங்கீகரிக்கப்பட்ட 390 பதவிகளில் 201 பதவிகள் வெற்றிடமாக உள்ளன. |

அதிகாரசபையினால் ஆட்சேர்ப்பு நடைமுறைகளை மறுசீரமைப்பதற்கான முன்மொழிவுகள் 2025.04.30ஆந் திகதியன்று முகாமைத்துவ சேவைத்

திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், தரவு முறைமைகள் போன்ற பாரிய கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான விசேட நிபுணத்துவ மனித வளங்கள் அதிகாரசபையிடம் இல்லாமை ஒரு பிரதான பிரச்சினையாகக் காணப்படுவதாகவும் குழுவில் வெளிக்கொணரப்பட்டது.

ஆட்சேர்ப்பு நடைவடிக்கைமுறையை திருத்தம் செய்வது, ஒழுங்குறுத்தல் மற்றும் பலப்படுத்தும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், அதிகாரசபைக்கு முதலில் அங்கீகரிக்கப்பட்டிருந்த 390 பதவிகளுக்குப் பதிலாக 262 ஐக் கொண்ட புதிய ஒழுங்கமைப்பு பிரேரிக்கப்பட்டுள்ளது என்றும், அதில் பணிப்பாளர் (ஆராய்ச்சி) மற்றும் பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) போன்ற புதிய பதவிகள் உள்ளடங்குவதாகவும் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

வெளிக்கள ஒழுங்குறுத்தலை வலுப்படுத்த மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்குப் (DCOs) பதிலாக மாகாண ஒருங்கிணைப்பாளர்கள் (PCOs) பதவி முன்மொழியப்பட்டுள்ளது என்றும், இதன் மூலம் ஒழுங்குறுத்தலை மாகாண சபைகள் மற்றும் நகர்ப்புறப் பிரதேசங்களுக்கு விஸ்தரிக்க எதிர்பார்ப்பதாகவும் குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

அதிகாரசபை கோரியுள்ள புதிய பணியாட்டொகுதிக்கு துரிதமாக அங்கீகாரம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும், அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறைகளைத் திருத்தம் செய்வதற்கு துரிதமாக அங்கீகாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்வதாகவும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் தெரிவித்தார்.

<u>குழுவின் சிபாரிசு</u>

I. **நிர்மானத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியை திருத்தம் செய்யும் பிரேரணையை அங்கீகரிக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.**

II. **ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையை திருத்தம் செய்து துரிதமாக அங்கீகரிக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.**

**III. அதிகாரசபையின் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு துரிதமாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.**

## 9. செயலாற்றுகை – சட்டத்தின் நோக்கங்கள் மற்றும் பிரிவுகளுக்கு ஏற்புடையதான தன்மை

| குழுவின் அவதானிப்பு | சிக்கலுக்கான காரணம் மற்றும் அதிகாரசபையின் நடவடிக்கை |
|---|---|
| தரவு முறைமையின் வரையறைகள்<br><br>சட்டத்தின் கீழ் அறிக்கையிடப்பட வேண்டிய தனியார் துறை நிர்மாணத் தகவல்கள் தரவு முறைமையில் உள்ளடக்கப்படாமை. | காரணம் – சட்டத்தின் கீழ் “இனங்காணப்பட்ட நிர்மாணிப்பு” இன் கீழ் கொள்ளப்படுகின்ற ரூபா மில்லியன் 10 இற்கு மேற்பட்ட பொதுக் கட்டிடங்கள் மாத்திரமாகும்.<br>நடவடிக்கை – ரூபா மில்லியன் 100 இற்குக் குறைவான கருத்திட்டங்களுக்கு தரவுகளை உட்புகுத்த இயலுமானவாறு ஒன்லையின் மென்பொருள் ஒன்றை தயார் செய்யத் திட்டமிடல். |
| ஒழுங்குறுத்தல் மற்றும் தத்துவமுள்ளதாக்கல் பற்றிய பலவீனங்கள்<br><br>தரவு முறைமையின் பூரணமற்ற தன்மை காரணமாக கைத்தொழிலின் வீழ்ச்சிக்கு காரணமாதல் என்பது மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பற்றி ஆராய முடியாமை. | காரணம் – தகவல் வழங்காத தனியார் துறையினருக்கு எதிராகத் தண்டப் பணம் விதித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள சட்டத்தில் அதிகாரம் இல்லாமை.<br>நடவடிக்கை – தத்துவமுள்ளதாக்கல் மற்றும் ஆராய்ச்சிகளை பலப்படுத்துவதற்கு சட்டத்தை திருத்தம் செய்யும் நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தில் காணப்படுதல். |
| முறைமையை அமுல்படுத்துவதிலுள்ள பலவீனங்கள் | காரணம் – 2017 இல் முயற்சி மேற்கொள்ளப்பட்ட போதும் தகைமைபெற்ற சேவை வழங்குனர்களிடமிருந்து உறுதியான |

| | |
|---|---|
| | பதில் கிடைக்காமை காரணமாக தரவு முறைமையை முன்னெடுத்துச் செல்வது கடினமாதல்.<br>நடவடிக்கை – அதிகாரசபை ஏற்கெனவே உள்ளகத் தரவு முறைமையை தயார் செய்துள்ளதுடன் எதிர்காலத்தில், அரச நிறுவனங்கள் ஒப்பந்தம் வழங்கியுள்ள கருத்திட்டங்களின் பிரதிகளை இதில் தரவேற்றம் செய்ய எதிர்பார்த்தல். |

இந்த அனைத்து விடயங்களையும் கவனத்தில் கொண்ட குழு, அதிகாரசபைக்கு ஒதுக்கப்பட்ட செயல்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான சட்டத்தைத் திருத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்கும் பொறுப்பு சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பணிப்பாளர் குழு உறுப்பினர்களுக்குப் பொறுப்பளிக்கப்படுகின்றது என்பதைச் சுட்டிக்காட்டியது.

## 10. 2024 ஆண்டின் இலக்குப் பணிகளின் முன்னேற்றம் – அபிவிருத்திப் பிரிவு

2024 ஆண்டுக்கான அதிகாரசபையின் அபிவிருத்திப் பிரிவின் முன்னேற்றம் பின்வருமாறாகும்.

| | பணி/கருத்திட்டம் | 2024.12.31 திகதிக்கு | | |
|---|---|---|---|---|
| | | இலக்குச் செயற்பணி | முன்னேற்றம் | முன்னேற்ற விகிதம் |
| (i) | இனங்காணப்பட்ட நிர்மாணப் பணிகளுக்கு நிர்மாண ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல் | 2,100 | 4,548 | 216% |
| (ii) | ஆதன அபிவிருத்தியாளர்களை பதிவு செய்தல் மற்றும் பட்டியலொன்றைப் பேணிவருதல் | 20 | 7 | 35% |
| (iii) | தொழில் ஒழுங்குறுத்தலுக்கான தகவல்களை சேகரிப்பதற்கு | 12 | 4 | 33% |

| | | | | |
|---|---|---|---|---|
| | வெளிநாட்டு ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல் | | | |
| (iv) | உரிமம் வழங்கும் முறைமையை முறைப்படுத்தவும், ஒழுங்குபடுத்தவும் நிர்மாணப் பொருள் வழங்குனர்களை பதிவு செய்தல் மற்றும் பட்டியலைப் பேணிவருதல். | 390 | 41 | 10% |
| (v) | செயலாற்றுகையை ஒழுங்குறுத்துவதற்கு தகுதிவாய்ந்த ஆட்களை பதிவு செய்வதைத் தாபித்தல். | 4 | - | 0% |
| (vi) | நிர்மாணிப்பு இடங்களில் சுகாதாரமும், பாதுகாப்பும், தரமான தன்மை, கருத்திட்ட முகாமைத்துவம் போன்ற விடயங்களை கண்காணிப்புச் செய்வதற்கான வெளிக்கள பரிசோதனை | 385 | 272 | 71% |

இனங்காணப்பட்ட நிர்மாணப் பணிகளுக்கு நிர்மாண ஒப்பந்ததாரர்களை பதிவு செய்வது உத்தேச இலக்கினை விஞ்சி மிகச் சிறந்த நிலைமையை வெளிப்படுத்தியுள்ள போதிலும், அது தொடர்பிலான உத்தேச இலக்கு தொடர்பில் சிக்கலான நிலைமை காணப்படுவதாகவும், மேலே (ii), (iii), (iv), பிரிவுகளின் இலக்குகளை அடைந்துகொள்வதன் முன்னேற்றம் மிகக் குறைவான மட்டத்தில் காணப்படுவதாகவும், செயலாற்றுகையை ஒழுங்குறுத்துவதற்கு தகுதிவாய்ந்த ஆட்களை பதிவு செய்வதைத் தாபிப்பது தொடர்பாக உத்தேச இலக்குகள் எதுவும் அடையப் பெறவில்லை என்றும், குழு அவதானிப்புச் செய்தது.

ஒவ்வொரு பிரிவு தொடர்பிலும் தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச இலக்குகள் மற்றும் பிரதான செயலாற்றுகைச் சுட்டிகளை (KPI) தரமான தரவுகளின் (Qualitative) அடிப்படையில் அளவு ரீதியாக (Quantitative) அளவிடுவது கடினமாக உள்ளதன் காரணமாக சிக்கல் எழுந்துள்ளது என்றும், மேற்படி இலக்குகள் பழைய தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதனால் மீண்டும் ஆராயப்படல் வேண்டும் என்றும்,

ஒப்பந்ததாரர்கள் அதிகாரசபையில் சுயமாக பதிவு செய்துகொள்வதனால் இது அதிகாரசபையின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் அமுல்படுத்தப்படுவதாகவும், ஆதன அபிவிருத்தியாளர்களை பதிவு செய்வதற்கு சட்டரீதியான தேவைப்பாடு (Legal Requirement) இல்லாமை உத்தேச இலக்குகளை அடைந்துகொள்வதில் தடையாகும் என்றும், இந்த சிக்கலைத் தீர்த்துக் கொள்வதற்காக, ஆதன அபிவிருத்தி அங்கீகாரத்தை நகர அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக வழங்கும் போது அதிகாரசபையில் பதிவு செய்திருப்பதை கட்டாயமாக்க வேண்டுமென்ற பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குழுவில் தெரிவிக்கப்பட்டது.

**குழுவின் சிபாரிசு**

I. இப்பிரிவுகளின் உத்தேச இலக்குகள் மற்றும் பிரதான செயலாற்றுகைச் சுட்டிகளில் சிக்கல் காணப்படுமாயின் அவற்றைச் சீர்செய்து கொள்ளல் மற்றும் அதிகாரசபையின் செயலாற்றுகை இலக்குகளை அடைந்துகொள்ளத் தேவையான நடவடிக்கைகளை துரிதப்படுத்தல்.

## 11.1 2024 ஆண்டின் இலக்குப் பணிகளின் முன்னேற்றம் – கைத்தொழில் சேவைகள் பிரிவு

2024 ஆண்டுக்கான அதிகாரசபையின் கைத்தொழில் பிரிவின் முன்னேற்றம் பின்வருமாறாகும்.

| | பணி/கருத்திட்டம் | இலக்குச் செயற்பணி | 2024.12.31 திகதிக்கு முன்னேற்றம் | | அவதானிப்பு |
|---|---|---|---|---|---|
| (i) | கட்டிடப் பொருட்களின் விலை வித்தியாசம் பற்றி நிர்மாணத் துறையைச் சேர்ந்த தரப்பினர்களை தரப்படுத்தலுக்காக மாதாந்தம் | 12 | 11 | 92% | முன்னேற்றம் இலக்கை அண்மித்துள்ள போதும் மாதாந்த வெளியீடுகளை வெளியிடும் குறித்த காலஎல்லை மற்றும் தரமான |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வெளியீடுகளை வெளியிடல் | | | | உள்ளடக்கத்தை உறுதி செய்தல் வேண்டும் என்பது. |
| (ii) | நிர்மாணத் தொழிலில் பிணக்குகளைத் தீர்த்துவைக்கும் சேவைகளை (தலையீடு, தீர்ப்பளித்தல் போன்றன) வழங்குதல் | 22 | 31 | 141% | இலக்கை விஞ்சியுள்ளது. எனினும் பிணக்குகள் அதிகரிப்பது கைத்தொழிலின் ஒழுங்கற்ற தன்மை மற்றும் நம்பகத்தன்மை பலவீனமடைவதை வெளிப்படுத்துகின்றது என்பது |
| (iii) | நிர்மாணக் கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட ஆட்களுக்கான மதியுரைச் சேவைகளை ஆற்றுதல் | 800 | 20 7 | 26% | மிகக் குறைவான முன்னேற்றம் என்பதும், கைத்தொழில்துறைக்கு மதியுரைச் சேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் தேவை கடுமையாக நிலவுகின்றது என்பதும் |
| (iv) | நிர்மாணத் தொழிலின் விளைதிறனை மேம்படுத்த தகுதிவாய்ந்த தீர்ப்பு வழங்குபவர்களை உருவாக்குவதற்காக 20 பேர் கொண்ட குழுவினருக்கு டிப்ளோமா பாடநெறியை நடாத்தல் | 1 | 0 | 0% | எந்தவொரு முன்னேற்றமும் இல்லை. அங்கீகாரம் மற்றும் நிதிப் பற்றாக்குறை காரணமாக பாடநெறியை ஆரம்பிக்க முடியவில்லை. |
| (v) | தொழில்நுட்பக் கணக்காய்வு | 58 | 50 | 86% | முன்னேற்றம் ஒப்பீட்டு ரீதியில் அதிகம். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செயன்முறையை மேற்கொள்வதற்காக தரநியம முகாமைத்துவ கணக்காய்வாளர் மற்றும் தீர்ப்பு வழங்குபவர்களின் குழுமத்தை தாபித்தல் | | | | எனினும் முழுமையான அங்கீகாரம் மற்றும் பதிவு இதுவரை நிறைவு செய்யப்படவில்லை என்பது |
| (vi) | தரநியம முகாமைத்துவ கணக்காய்வாளர்களினால் தொழில்நுட்பக் கணக்காய்வுச் செயன்முறை மேற்கொள்ளப்படல். | 10 | 1 | 10% | மிகக் குறைந்த முன்னேற்றம் என்பது. நிபுணர்களான ஆட்கள் மற்றும் அலுவலர் பற்றாக்குறை இதில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது |
| (vii) | பசுமைக் கட்டிடப் பொருட்களை தரப்படுத்தல் | 5 | 0 | 0% | எந்தவொரு முன்னேற்றமும் இல்லை. சட்டத்தின் நோக்கமொன்றாயினும் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையினால் முன்னேற்றம் பாதிக்கப்பட்டுள்ளது என்பது |
| (viii) | மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஊடாக 25 மாவட்டங்களிலும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல் | 24 | 4 | 17% | முன்னேற்றம் மிகக் குறைவு என்பது, இவ்வாறான விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை கூடுதலாக நடாத்த வேண்டிய தேவை உள்ளது என்பது |

<u>குழுவின் சிபாரிசு</u>

I. **இப்பிரிவுகளின் உத்தேச இலக்குகள் மற்றும் பிரதான செயலாற்றுகைச் சுட்டிகளில் சிக்கல் காணப்படுமாயின் அவற்றைச் சீர்செய்து கொள்ளல் மற்றும் அதிகாரசபையின் செயலாற்றுகை இலக்குகளை அடைந்துகொள்ளத் தேவையான நடவடிக்கைகளை துரிதப்படுத்தல்.**

## 11.2 2024 ஆண்டின் இலக்குப் பணிகளின் முன்னேற்றம் – பயிற்சிப் பிரிவு

2024 ஆண்டுக்கான அதிகாரசபையின் பயிற்சிப் பிரிவின் முன்னேற்றம் பின்வருமாறாகும்.

| | **பணி/கருத்திட்டம்** | **இலக்குச் செயற்பணி** | **2024.12.31 திகதிக்கு முன்னேற்றம்** | | **அவதானிப்பு** |
|---|---|---|---|---|---|
| (i) | நிர்மாண இடங்களின் கண்காணிப்பாளர்கள், நடுத்தர மட்டத்திலான தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் ஏனைய தொழில் வல்லுனர்களை பதிவு செய்தல் | 800 | 0 | 0% | இத்துறையைச் சேர்ந்த பதவியணியினர் பற்றாக்குறை மற்றும் RPL செயன்முறையின் தாமதம் காரணமாக இப்பணி அமுல்படுத்தப்படவில்லை என்பது தெரியவந்தது. |
| (ii) | டிஜிரல் தரவுக் களஞ்சியத்தை பேணிவருவதுடன் நிர்மாணக் கலைஞர்களை பதிவு செய்தல் மற்றும் உரிமப்பத்திரம் வழங்குதல் | 500 | 381 | 76% | இலக்கை அடைந்துகொள்ளும் போது உள்ளகத் தரவு முறைமையின் வரையறைகள் மற்றும் மனித வளப் பற்றாக்குறை தாக்கம் செலுத்தியுள்ளது என்பது தெரியவந்தது |
| (iii) | நிர்மாணக் கைத்தொழிலில் ஊழியப் படையின் கண்காணிப்பு, | 830 | 67 | 8% | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் குறைந்த முன்னேற்றத்திற்குக் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முகாமைத்துவம் மற்றும் ஏனைய தொழில் வகைகளின் ஆட்களுக்கு பயிற்சி வழங்குதல் | | | | காரணம் வதிவிட வசதிகள் மட்டுப்படுத்தப்பட்டமை மற்றும் முதலீடு குறைவாக உள்ளமை என்பது தெரியவந்தது |
| (iv) | முன் கற்றலுக்கான அங்கீகாரம் (RPL) நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நிர்மாணக் கலைஞர்களுக்கு NVQ சான்றிதழ் வழங்குதல் | 750 | 419 | 56% | RPL நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்தும் நெருக்கடி நிலையில் உள்ளதுடன், நிருவாகப் பிரிவுகளுக்கு இடையிலான தொடர்பு இல்லாமை காரணமாக செயலாற்றுகை குறைந்துள்ளது. |

<u>*குழுவின் சிபாரிசு*</u>

I. **நிர்மாண இயந்திரசாதனப் பயிற்சி நிறுவகம் (CETRAC) மற்றும் இயந்திரசாதனங்களை இயக்கும் கலைஞர்களின் கல்லூரி (OTC) ஆகிய நிறுவனங்களுக்கு உரித்தானதாக நாட்டுக்கும், பிராந்தியத்துக்கும் முக்கியத்துவம்வாய்ந்த ஏனைய நிறுவனங்களில் இல்லாத நிர்மாண இயந்திரசாதனங்கள் தொடர்பிலான வசதிகள் உள்ளதனால், இந்த நிறுவனங்களின் கொள்ளளவை (Capacity) உச்சளவில் பயன்படுத்திக் கொள்ளல்.**

II. **பயன்பாட்டில் உள்ள தொழில்நுட்ப அம்சங்கள் மற்றும் இயந்திரசாதனங்கள் காலாவதியாகி உள்ளதனால், அவற்றை மீளத்தாபிப்பதற்கு ஜப்பான் உதவியின் (JICA) கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கருத்திட்டப் பிரேரணைகளை (Project Proposals) துரிதமாக அமுல்படுத்தல்.**

III. **அறிவு மற்றும் திறமை உள்ள போதிலும் தொழில் சான்றிதழ் இல்லாத கலைஞர்களுக்கு கற்றல் அங்கீகார நிகழ்ச்சித்திட்டத்தை**

**(Recognition of Prior Learning - RPL) மேம்படுத்தவும், பிரபல்யப்படுத்தவும் விசேட கவனம் செலுத்தல்.**

IV. **கல்வி அமைச்சுடன் இணைந்து அமுல்படுத்தப்படுகின்ற 13 வருட கால தொடர்ச்சியான கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றிகரமானதன்மை மற்றும் முன்னேற்றத்தை (2018 இல் ஆரம்பானது) நாளாந்தம் கண்காணிப்புச் செய்தல் மற்றும் அது தொடர்பான முன்னேற்றத்தை குழு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடல்.**

V. **பாடசாலைக் கட்டமைப்பில் இந்தத் தொழில்துறையை பிரபல்யப்படுத்துவதற்கான மேலதிக ஆலோசனைச் சேவைகள் /விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.**

## 12. PPP மாதிரியமைப்பின் கீழ் திறன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செலவினங்கள்

இது தொடர்பாக குழு பின்வரும் அவதானிப்புக்களைச் செய்தது.

| | **2024** | **2023** | **2022** | **2021** | **2020** |
|---|---|---|---|---|---|
| | **ரூ.மி.** | **ரூ.மி.** | **ரூ.மி.** | **ரூ.மி.** | **ரூ.மி.** |
| PPP மாதிரியமைப்பின் கீழ் நிர்மாணக் கைத்தொழிலுக்கான திறன் பயிற்சி | 6.1 | 13.15 | 48.30 | 79.60 | 185.75 |

தேசிய பயிலுனர் மற்றும் தொழில் பயிற்சி அதிகாரசபை (NAITA) மற்றும் நிர்மாணிப்பாளர்களின் சங்கத்துடன் இணைந்து, திறைசேரி ஏற்பாடுகளின் கீழ் இந்த நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், பயிலுனர்களுக்கு 3 மாத காலப்பகுதிக்கு ரூபா 10,000 ஆன மாதாந்தக் கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது என்றும், 2020 இன் பின்னர் 3,601 பேர் பதிவு செய்து 3,443 பேர் பயிற்சியை நிறைவு செய்துள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

<u>குழுவின் சிபாரிசு</u>

I. **இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான முழுமையான செயன்முறை, செலவினங்கள் மற்றும் பயிற்றப்பட்ட எண்ணிக்கை பற்றிய விரிவான அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் பிரதி சகிதம் குழுவிடம் சமர்ப்பித்தல்.**

## 13. <u>அதிகாரசபையின் பணிப்பாளர் (நிதி) கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளமை தொடர்பான வழக்கு நடவடிக்கைகள் மற்றும் அது சம்பந்தமான செலவினம்</u>

அதிகாரசபையின் முன்னாள் தவிசாளரின் அறிவுரைகளைக் கவனத்தில் கொள்ளாது அதிகாரசபையின் முன்னாள் பணிப்பாளர் (நிதி) வாகனக் கொடுப்பனவை தொடர்ச்சியாகப் பெற்றுள்ளமை மற்றும் நிதியை உரியவாறு திறைசேரிக்கு கையளிக்காமை ஆகிய அடிப்படைக் குற்றச்சாட்டுக்களின் பேரில் 2021.10.08 திகதி முதல் கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளார் என்றும், அவருக்கு எதிராக ஆரம்ப விசாரணை நடாத்தாது 2021 டிசம்பர் மாதம் அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்றும், பதவி நீக்கம் செய்யப்பட முன்னர் அது தொடர்பான தீர்மானம் பணிப்பாளர் சபையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை எனினும், பின்னர் 2022 சனவரி மாதம் பணிப்பாளர் சபை அதனை ஏற்று அங்கீகரித்துக் கொண்டுள்ளது (Ratify) என்றும், குழு அவதானிப்புச் செய்தது.

இவ்வாறு பதவி நீக்கம் செய்யப்பட்டமைக்கு எதிராக அதிகாரசபையின் முன்னாள் பணிப்பாளர் (நிதி) சட்ட நடவடிக்கை மேற்கொண்டுள்ளார் என்பதுடன், 2022.07.29 திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பு மூலம் அவருக்கு சட்டபூர்வமாக உரித்தான சகல கொடுப்பனவுகள் மற்றும் சேவைசார் நிபந்தனைகளின் கீழ் மீண்டும் சேவைக்கு அமர்த்துமாறு உத்தரவிடப்பட்டுள்ள போதிலும், அதிகாரசபை இத்தீர்ப்பை அமுல்படுத்தாது, முன்னாள் தவிசாளரின் அழுத்தம் காரணமாக மற்றும் சட்டப் பிரிவின் ஆலோசனைகளைப் பெறாது, உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளது என்றும், பின்னர் 2024 மார்ச் மாதம் அதிகாரசபை குறித்த மனுவை வாபஸ் பெற்றுள்ளது என்றும், முன்னாள் பணிப்பாளரினால்

முன்னாள் தவிசாளருக்கு எதிராக தனிப்பட்ட மான நஷ்ட ஈடு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் குழுவில் தெரிவிக்கப்பட்டது.

2025 ஆகஸ்ட் மாதமளவில் முன்னாள் நிதிப் பணிப்பாளரின் வழக்கு நடவடிக்கை தொடர்பாக அதிகாரசபை சுமார் 15.0 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளதுடன், அதில் பின்வரும் கொடுப்பனவுகள் உள்ளடங்கும்.

| | **சட்டச் சிக்கல்** | **செலவினம் (ரூ.)** | **விபரம்** |
|---|---|---|---|
| (i) | நிதிப் பணிப்பாளரினால் தவிசாளருக்கு எதிராக தனிப்பட்ட வகையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு | 420,000 | அதிகாரசபையினால் இந்த வழக்கு நடவடிக்கைகளுக்கான செலவினங்கள் செய்யப்பட்டுள்ளன. |
| (ii) | சேவையை முடிவுறுத்தியமையை எதிர்த்து அதிகாரசபைக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கு | 1,615,000 | தீர்ப்பு - ரூபா 1,723,181 ஆன நிலுவைச் சம்பளத்தை செலுத்தி, அலுவலரை மீண்டும் சேவைக்கு அமர்த்துதல். |
| (iii) | மேற்படி தீர்ப்பை அமுல்படுத்தாது சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடு | 1,750,000 | அதிகாரசபை மேன்முறையீட்டை சமர்ப்பித்த போதிலும், பின்னர் குறித்த மேன்முறையீடு அதிகாரசபையினால் வாபஸ் பெறப்பட்டுள்ளமை. |
| (iv) | மேலே (ii) இன் தீர்ப்பை அமுல்படுத்தாமை காரணமாக பணிப்பாளர் சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு | 10,820,000 | இந்த வழக்கு இதுவரை நிறைவடையவில்லை என்பதுடன், ஒவ்வொரு வழக்கு விசாரணையின் போதும் ரூபா 625,000 ஆன |

| | | | |
|---|---|---|---|
| | | | செலவினம் செய்யப்படுகின்றது. |
| (v) | தொழில் நியாயசபையில் வழக்கு | 275,000 | மேலதிக வழக்கொன்றாக அதிகாரசபை செலவினங்களை செய்துள்ளது. |
| (vi) | பொதுச் சட்டச் சேவைச் செலவினங்கள் | 135,000 | மேலதிக சட்டத்தரணிக் கட்டணம் மற்றும் சட்ட ஆலோசனைக் கட்டணங்களை அதிகாரசபை செலுத்தியுள்ளது. |
| மொத்த செலவினம் | | **ரூபா 15,015,000 (மில்லியன் 15.01) .** | |

இது தொடர்பாக நீண்டநேரம் கலந்துரையாடிய குழு, அதிகாரசபை கீழே குறிப்பிடப்பட்டுள்ள தவறுகளை மேற்கொண்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டியது.

- **நியமன அதிகாரி மற்றும் ஒழுக்காற்று அதிகாரியான பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இன்றி, ஊழியர்களின் சேவையில் தாக்கத்தை ஏற்படுத்தும் தீர்மானங்களை மேற்கொள்ளல், நிதிப் பணிப்பாளரை பதவி நீக்கம் செய்யும் போது ஆரம்ப விசாரணையோ, குற்றப்பத்திரமோ அல்லது பணிப்பாளர் சபையின் அங்கீகாரமோ இன்றி நடவடிக்கை மேற்கொண்டுள்ளமை தவறானதாகும் என்பதும் அவ்வாறு நடவடிக்கை மேற்கொண்டமை காரணமாக நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கான அடிப்படை உருவாகியுள்ளது என்பதும்,**

- **திறைசேரிச் செயலாளரின் PE/COP/POLI/Circulars ஆம் இலக்க 2015.05.25 ஆம் திகதிய அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2015 மற்றும் திருத்தம் செய்யப்பட்ட திறைசேரிச் செயலாளரின் PE/COP/POLI/Circulars ஆம் இலக்க 2016.10.27 ஆம் திகதிய அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2015(i) சுற்றறிக்கையின் 3.3 பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைய**

உத்தியோகபூர்வ வாகனமொன்றைப் பயன்படுத்தும் உரிமை உள்ள அலுவலர் ஒருவருக்கு, மேற்படி உத்தியோகபூர்வ வாகனத்தைப் பயன்படுத்தல் அல்லது ரூபா 50,000 ஆன மாதாந்தக் கொடுப்பனவு மற்றும் பதவிக்கு உரிய மாதாந்த எரிபொருள் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளல் ஆகிய இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்துகொள்ளும் உரிமை உள்ள போதிலும் அது தொடர்பாக நிதிப் பணிப்பாளருக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமை,

- பொது அதிகாரசபைகள் அனைத்தும் நிதி அமைச்சு உட்பட அரச நிதிச் சுற்றறிக்கைகளுக்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள போதிலும், பணிப்பாளர் சபையினால் சட்டத்துக்கு முரணான தீர்மானத்தின் பேரில் தனிப்பட்ட பழிவாங்கல்களுக்கு பொது மக்களின் நிதி விரயமாக்கப்பட்டுள்ளது என்பது.

<u>குழுவின் சிபாரிசு</u>

I. முன்னாள் நிதிப் பணிப்பாளர் சம்பந்தமான வழக்கு நடவடிக்கை காரணமாக அதிகாரசபை தாங்கிக் கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ள 15.01 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான செலவினம் தொடர்பாக பின்வரும் விடயங்களை வெளிப்படுத்தக்கூடிய வகையில் அமைச்சு மட்டத்தில் சுயாதீன விசாரணையொன்றை துரிதமாக நடாத்தல்,

   - வழக்கு நடவடிக்கைகளை பேணிவரும் போது சட்டரீதியான முறையியல்கள் முறையாகப் பின்பற்றப்பட்டுள்ளனவா என்பது,

   - நீதிமன்ற உத்தரவுகளை உடனடியாக அமுல்படுத்தாதிருப்பதற்கு தீர்மானித்தமை தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டியது யார்.

II. பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களிடமிருந்து இத்தொகையை மீண்டும் அரசுக்கு அறவிட்டுக் கொள்ளல்.

**III. நியமன அதிகாரி (Appointing Authority) மற்றும் ஒழுக்காற்று அதிகாரி (Disciplinary Authority) என்ற வகையில் பணிப்பாளர் சபை எதிர்காலத்தில் தமது ஊழியர்களை பதவி நீக்கம் செய்வதற்கு அல்லது கட்டாய லீவில் அனுப்ப முன்னர் முறையான முறையியலைப் பின்பற்றல்.**

**IV. நிருவாக மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பாக சகல அலுவலர்களையும் விழிப்புணர்வூட்டல்.**

## 14. <u>அதிகாரசபையின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடம்</u>

| விடயம் | குழுவின் அவதானிப்பு | அமைச்சு/அதிகாரசபையின் விளக்கம் |
|---|---|---|
| அதிகாரசபைக் குறும் ரவர் ஹோல் மன்றத்திற்கும் இடையில் உள்ள உடன்படிக்கை | 2016 இன் பின்னர் குத்தகை வாடகையை திருத்தம் செய்யாது 2019 இல் மேலும் 30 வருடங்களுக்கு குத்தகை உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டுள்ளது என்பது. (ஆரம்ப உடன்படிக்கை - 1986). | ✓ கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருப்பது இருதரப்பினருக்கும் அமைச்சின் செலவில் என்பது<br>✓ புதிய உடன்படிக்கைக் கட்டணம் விலைமதிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை என்பது<br>✓ ரவர் ஹோல் தரப்பினருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக கருத்து நிலவுகின்றது என்பது |

| | | |
|---|---|---|
| நிலுவை குத்தகை மற்றும் அகற்றல் | கூட்டு அமைச்சரவை தீர்மானம் மூலம் ரூ.மி. 145 ஆன நிலுவைத் தொகையைச் செலுத்துவதற்கும், அதிகாரசபையின் அலுவலகத்தை நிர்மாண இயந்திரசாதனங்கள் பயிற்சி நிலையத்திற்கு (CETRAC) கொண்டு செல்வதற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்பது. அதிகாரசபை ரூ.மி. 25 ஐ செலுத்தியுள்ளது என்பது. | ✓ ரூ.மி. 145 ஆன நிலுவைத் தொகை கணிப்பிடப்பட்ட முறை அதிகாரசபைக்கு அறிவிக்கப்படவில்லை என்பது<br>✓ அதிகாரசபையின் அலுவலகத்தை தாபிக்க அங்கு போதியளவு இடவசதி இல்லை என்பது. |
| நிர்மாண இயந்திரசாதனப் பயிற்சி நிலையத்திற்கு மாற்றல் | அதிகாரசபையின் அலுவலகத்தை நிர்மாண இயந்திரசாதனப் பயிற்சி நிலையத்திற்கு கொண்டு செல்லத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சுச் செயலாளர் அறிவித்துள்ளார் என்பது. | ✓ நிர்மாண இயந்திரசாதன பயிற்சி நிலையத்திற்கு உரித்தான காணி தொடர்பாகவும் முறையான குத்தகை உடன்படிக்கை இல்லாமையினால் குறித்த இடத்திற்கு மாற்றல் செய்வது கருத்துமுரண்பாடு மிக்க நிலைமை என்பது. |
| சிக்கலைத் தீர்க்க | அமைச்சரவைத் தீர்மானம் உள்ள போதிலும், இதுவரை | ✓ இரண்டு அரச நிறுவனங்களாக உள்ளதனால் இந்த |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் | தீக்கப்படாத சிக்கலாக உள்ளது என்பது. | சிக்கலைத் தீர்த்துக்கொள்ள சட்ட மாஅதிபர் திணைக்களம் அறிவுரை வழங்கியுள்ளது என்பது.<br>✓ பிரதம அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடல் மூலமும் இணக்கப்பாட்டை எட்ட முடியாது போனதன் காரணமாக மீண்டும் சட்ட மாஅதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பது. |
| அமைச்சுச் செயலாளரின் நிலைப்பாடு | - | ✓ குழுக் கலந்துரையாடல்களின் பின்னர் அனுப்பியுள்ள இணக்கப்பாட்டுக் கூற்றிலுள்ள விடயங்கள் சரியாக இல்லாமை காரணமாக அதில் கையொப்பமிடவில்லை என்றும், சிக்கலை சாதகமான |

| | | |
|---|---|---|
| | | முறையில் கலந்துரையாடல் மூலம் தீர்க்க வேண்டும் என்றும் குறிப்பிட்டமை. |

<u>குழுவின் சிபாரிசு</u>

I. **சிக்கலை நியாயமான முறையில் தீர்த்துவைப்பதற்காக கட்டிடத்தின் விலைமதிப்பைப் (Valuation) பெற்றுக் கொள்ளல் மற்றும் இரு தரப்பினருக்கும் அநீதி இழைக்காத வகையில் உடன்படிக்கையை நிறைவு செய்துகொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.**

## 15. <u>அதிகாரசபையின் தலைமை அலுவலகத்தின் கூரையை புதுப்பித்தல்</u>

அதிகாரசபைக் கட்டிடத்தின் கூரை 35 வருடங்களுக்கும் மேல் பழைமைவாய்ந்தது என்றும், அதனைப் புதுப்பிக்க 20 மில்லியன் ரூபா அவசியமென்றும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றும், அதிகாரசபைக்கு உரித்தான நிதிப் பற்றாக்குறை காரணமாக புதுப்பித்தல் செலவினங்களை செய்வதற்கு ஆற்றல் இருந்தது சுமார் 4 மில்லியன் ரூபா எனும் மட்டுப்படுத்தப்பட்ட தொகை மாத்திரமாகும் என்றும், மேற்படி அவசர தேவையைக் கவனத்தில் கொண்டு, அதிகாரசபை பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து விலைமனுக்களைக் கோரியுள்ளது என்றும், கிடைத்த குறைந்த விலையை சமர்ப்பித்த C7 தரத்தைச் சேர்ந்த ஒப்பந்ததாரருடன் கலந்துரையாடி 5.9 மில்லியன் ரூபா வரையான தொகைக்கு வேலைகளை நிறைவேற்றிக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது என்றும் குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

## 16. <u>அதிகாரசபைக்கு கணினி கொள்வனவு செய்தல்</u>

2021 இல் சந்தை விலை ரூபா 100,000 ஆன ஒரு மடிக் கணினி ரூபா 240,000 வீதம் 21 மடிக் கணினிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி கணினிகள் குறைபாடுகள் மிக்கவை என்றும் குழுவிடம் தகவல்கள்

சமர்ப்பிக்கப்பட்டன. இது தொடர்பாக விளக்கமளித்த பணிப்பாளர் நாயகம், சுமார் 16 கணினிகள் மாத்திரம் இரண்டாவது குறைந்த விலைமனுவை சமர்ப்பித்த நிறுவனத்திடம் கொள்வனவு செய்யப்பட்டது என்றும், (குறைந்தபட்ச விலைமனுவிலும் பார்க்க ரூபா 88,500 அதிகமாக), ஒரு சில கணினிகளில் மாத்திரம் Hinge குறைபாடு காணப்பட்டதாகவும், அவற்றை வழங்குனர் புதுப்பித்துக் கொடுத்ததாகவும், தற்போது அவற்றில் குறைபாடுகள் இல்லை என்றும் குழு அவதானிப்புச் செய்தது.

<u>குழுவின் சிபாரிசு</u>

***I. மேற்படி 16 மடிக் கணினிகள் கொள்வனவு செய்யப்பட்டமை மற்றும் அதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை நியாயமானதா என்பது தொடர்பாக பூரண அறிக்கையை குழுவிடமும், கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடமும் சமர்ப்பித்தல்.***

## 17. <u>அதிகாரசபையின் உள்ளகச் சிக்கல்கள் மற்றும் ஒழுக்காற்று விசாரணைகள்</u>

அதிகாரசபை தொடர்பாக அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவிடம் பல மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், நிறுவனத்தின் அலுவலர்களுக்கு மத்தியில் கடும் ஒற்றுமை இன்மை, அடிக்கடி மோதல் ஏற்படுத்திக் கொள்ளும் போக்கு, ஒருவருக்கொருவர் எதிராக ஒழுக்காற்று விசாரணை நடாத்தும் போக்கு காணப்படுவதாகவும், மேற்படி பெரும்பாலான குற்றப்பத்திரங்களில் நிதிசார் விடயங்கள் அன்றி, நிருவாக மற்றும் தொடர்பாடல்சார் சிக்கல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் இது தொர்பில் வினவிய போது குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

<u>குழுவின் சிபாரிசு</u>

**I. இந்த நிறுவனத்தில் உள்ள அனைத்து ஆரம்ப விசாரணைகள், முறையான ஒழுக்காற்று விசாரணைகள் தொடர்பிலும் நிதிசார் குற்றச்சாட்டுக்கள் மற்றும் நிதியல்லாத குற்றச்சாட்டுக்கள் என அவற்றை பிரித்து, தொடர்ந்தும் நடாத்தப்பட வேண்டிய விசாரணைகள் யாவை என்பதைத் தீர்மானிப்பதற்காக அமைச்சினூடாக விசேட குழுவொன்றை நியமனம் செய்தல் மற்றும் நிதியல்லாத குற்றச்சாட்டுக்கள் தொடர்பில்**

**காணப்படுகின்ற விசாரணைகள் மற்றும் ஏனைய சகல விசாரணைகளையும் துரிதமாக மேற்கொண்டு நிறைவு செய்தல்.**

**II.** **யாராயினும் அலுவலர் ஒருவர் நல்ல நோக்கம் இன்றி தவறான முறையில் தனிப்பட்ட பழிவாங்கலுக்காக குற்றஞ்சாட்டுதல், ஆரம்ப விசாரணைகளை நடாத்தல் அல்லது குற்றப்பத்திரங்களை வெளியிட்டிருப்பின், மேற்படி அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளல்.**

**III.** **நிறுவனத்தின் செயலாற்றுகை இலக்கை அடைந்துகொள்வதற்கும், அதனை மேம்படுத்திக் கொள்வதற்கும் தேவையான உள்ளக சூழலை மேற்படி அதிகாரசபையில் ஏற்படுத்தத் தேவையான சகல நடவடிக்கைகளையும் துரிதப்படுத்தல்.**